**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்**
**பாராளுமன்றம்**

---

# 2002 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, கப்பற்றொழில் முகவர்களுக்கு உரிமமளித்தல் (திருத்தச்) சட்டம்

---

*(2002, ஒற்றோபர் மாதம் 04 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---


2002, ஒற்றோபர் மாதம் 04 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 6.25 தபாற் செலவு : ரூபா 4.50

## 2002 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, கப்பற்றொழில் முகவர்களுக்கு உரிமமளித்தல் (திருத்தச்) சட்டம்

[2002 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 4 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ— ஓ. 7/2001

**1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கப்பற்றொழில் முகவர்களுக்கு உரிமமளித்தல் சட்டத்தைத் திருத்துவதற்கும், அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமான தொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 2002 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, கப்பற்றொழில் முகவர்களுக்கு உரிமமளித்தல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். கருக்கப்பெயர்.

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கப்பற்றொழில் முகவர்களுக்கு உரிமமளித்தல் சட்டத்தின் விரிவுப் பெயரானது, "கப்பற்றொழில் முகவர் ஒருவரின் தொழிலைக்" என்ற சொற்களுக்குப் பதிலாக "ஒரு கப்பற்றொழில் முகவர், கப்பற்சரக்கனுப்புநர், கலன் செயற்படுத்தாப் பொதுக் காவுநர் மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர் தொழிலைக்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. 1972 ஆம் ஆண்டின் 10ஆம் இலக்கச் சட்டத்தின் விரிவுப் பெயரைத் திருத்துதல்.

3. (1) முதன்மைச் சட்டவாக்கத்திலும் மற்றும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்திலும் — "கப்பற்றொழில் முகவர்களுக்கு உரிமமளித்தல் சட்டம்" மற்றும் "கப்பற்றொழில் முகவர்கள்" என்பவை முறையே கப்பற்றொழில் முகவர்களுக்கு கப்பற்சரக் கனுப்புநர்க்கு, கலன் செயற்படுத்தாப் பொதுகாவுநர்க்கு உரிமமளித்தற் சட்டம்" மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர் சட்டம்" மற்றும்

(அ) "கப்பற்றொழில் முகவர்களுக்கு உரிமமளித்தல் சட்டம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கப்பற்றொழில் முகவர்களுக்கு , கப்பற்சரக்கனுப்பும் கலன் செயற்படுத்தாப் பொதுக் காவுநர்க்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் சட்டம்" என்னும் சொற்களும் ;

(ஆ) "கப்பற்றொழில் முகவர்கள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கப்பற்றொழில் முகவர்கள், கப்பற் சரக்கனுப்புநர் கலன் செயற்படுத்தாப் பொதுக்காவு நர் மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்" என்னும் சொற்களும்,

பதிலீடு செய்யப்படுதல் வேண்டும்.

2 - H 015598-700 (2002/07)

"கப்பற்றொழில் முகவர்கள், கப்பற் சரக்கனுப்புநர் கலன் செயற்படுத்தாப் பொதுக்காவுநர் மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர் என அறியப் படுதல் வேண்டும்.

(2) ஏதேனும் அறிவித்தல், அறிவிப்பு, ஒப்பந்தம் தொடர்பாடல், அல்லது வேறு ஏதேனும் ஆவணத்திலுள்ள "கப்பற்றொழில் முகவர்களுக்கு உரிமமளித்தல் சட்டம்" மற்றும் "கப்பற்றொழில் முகவர்கள்" என்பவற்றுக்கான குறிப்பீடு ஒவ்வொன்றும் முறையே, கப்பற்றொழில் முகவர்கள், கப்பற்சரக்கனுப்புநர் கலன்செயற்படுத்தாப் பொதுக்காவுநர் மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர் சட்டம்" மற்றும் "கப்பற்றொழில் முகவர்கள், கப்பற்சரக்கனுப்புநர், கலன்செயற் படுத்தாப் பொதுக்காவுநர் மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்" என வாசிக்கப்படுதலும் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :

(1) "தோதான அதிகாரி" என்னும் சொற்றொடரின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்னர் பின் வரும் புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன் மூலமும் :—

"கொள்கலன் செயற்படுத்துநர்கள்" என்பது இலங்கையில் கொள்கலன் முற்றுத்தரிப்பிடம், கொள் கலன் சாலை, மற்றும் கொள்கலக் கப்பற்சரக்கு நிலையச் செயற்பாட்டுத் தொழிலில் ஈடு பட்டுள்ள ஆள் ஒருவர் எனப் பொருள்படும்;

"கப்பற்சரக்கு அனுப்புநர்" என்பது கொண்டு செல்லுதலைப் பொறுப்பேற்கின்ற அல்லது ஆகாயம், கடல் அல்லது தரை மூலம் கொண்டுசெல்லுதலைப் பெறுகின்றதையும், அத்தகைய கொண்டுசெல்லுதலுடன் தொடர்பு பட்ட வேறு சேவைகள் வழங்குவதையும் உள்ளடக்குகின்ற சர்வதேசக் கப்பற்சரக்கு அனுப்பும் தொழிலில் ஈடுபடுகின்ற எவரேனும் ஆள் எனப் பொருள்படும் ; எனினும், விமான சேவையின் அல்லது கப்பல் சொந்தக்காரரின் அல்லது கப்பலொன்றின் குத்தகைக்காரரின் முகவர் என்ற வகையில், தனியே, பொருட்க

ளைக் கொண்டு செல்வதற்கான அல்லது சேவைகளை வழங்குவதற்கான ஆள் ஒருவரால் வழங்கப்படுகின்ற எவையேனும் சேவைகளை வழங்குவதற்கான ஆள் ஒருவரால் வழங்கப்படுகின்ற எவையேனும் சேவைகளை உள்ளடக்குதலாகாது ;";

(2) "உரிமம்" என்னும் சொல்லின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப்பின்னர் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :

"கலன் செயற்படுத்தாப் பொதுக் காவுநர்" என்பது, "காவுநரொருவரின் பணிகளிலும் ஈடுபடுகின்ற ஒரு கப்பற்சரக்கு அனுப்புநர் எனப்" பொருள்படும்.

5. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.